அடகு நகை மீட்டு இன்றைய மார்க்கெட் விலைக்கு விற்க நீங்கள் இருக்கும் இடத்திலேயே உடனடி பணம்
நல்ல அணுகுமுறை
தொடர்புக்கு : 70944 40944
[அரசு அங்கீகாரம் பெற்றது]

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

நகராட்சியில் அனுமதி பெற்ற வாகனம்
ராஜா 24 HOUR SERVICE
செப்டிக் டேங்க்
கிளினிங் சர்வீஸ்
குறைந்த செலவில்
சுத்தம் செய்து தருகிறோம்
63748 77947, 81480 84081

| Vol: 02 | Issue: 266 | 4 Pages | 24.4.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 266 | 4 பக்கங்கள் | 24.4.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**
**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று**

**விளக்கம்:**
மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவன் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை பசு மேய்ந்தாற் போன்றது.

## காஷ்மீர் தாக்குதல் எதிரொலி: சவுதி பயணம் ரத்து; அவசரமாக நாடு திரும்புகிறார் பிரதமர் மோடி



புதுடெல்லி, ஏப்.24

பிரதமர் மோடி 2 நாள் அரசு முறை பயணமாக சவுதி அரேபியாவுக்கு சென்றார். தனி விமானம் மூலம் புறப்பட்ட பிரதமர் மோடிசெவ்வாய்கிழமை(நேற்று)காலையில் சவுதி அரேபியாவில் சென்று இறங்கினார். முன்னதாக சவுதி அரேபியாவின் வான்பரப்பில் பிரதமர் மோடி பயணித்த விமானம் சென்றபோது, அந்நாட்டின் போர் விமானங்கள் கான்வாயாக மாறின.பிரதமர் மோடி பயணித்த விமானத்தின் முன் மற்றும் பின் பகுதியில் வட்டமிட்டபடி சவுதி அரேபிய விமானங்கள் பாதுகாப்பு மரியாதை செலுத்தின.

பிரதமர் மோடி, சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானின் அழைப்பை ஏற்று அங்கு சென்றார். அங்கு சென்ற அவருக்கு குண்டுகள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த வரவேற்பை பிரதமர் மோடியும் ஏற்று கொண்டார்.

இந்நிலையில், 2நாள்அரசுமுறைப்பயணமாகசவுதிஅரேபியாசென்றுள்ள பிரதமர் மோடி காஷ்மீர் தாக்குதல் சம்பவம் எதிரொலியாக, பயணத்தை பாதியில் ரத்து செய்துள்ளதாகவும், இன்று இரவே நாடு திரும்ப திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.இதையடுத்து நாளை காலை இந்தியா வந்திறங்குகிறார். தொடர்ந்து பாதுகாப்பு தொடர்பான மத்திய அமைச்சரவைக்கூட்டத்தைகூட்டிஆலோசனைநடத்தஉள்ளார்.இக்கூட்டத்தில் உள்நாட்டு பாதுகாப்பு உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது தொடர்பான முக்கிய ஆலோசனை நடத்த உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதனிடையே அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் பஹல்காம் சம்பவம் குறித்து எக்ஸ் வலைதளபக்கத்தில் தனது கண்டத்தை பதிவு செய்திருந்தார். தொடர்ந்து பிரதமர் மோடி உடன் தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு சம்பவம் குறித்து விசாரித்தார். ஜம்மு காஷ்மீரில் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து ஸ்ரீநகர் சென்றடைந்தார் உள்துறை அமைச்சர் அமித் ஷா.

காஷ்மீரில் பஹல்காம் பகுதியில் சுற்றுலா பயணிகளை குறி வைத்து பயங்கரவாதிகள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் 28 பேர் உயிரிழந்தனர். சமூக வலைதளங்களில் மத நல்லிணக்கத்தை குலைக்கும் வகையிலான பதிவுகளை கண்காணித்து நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## அமலாக்கத்துறை சம்மனுக்காக காத்திருப்பு பிரியங்கா



புதுடெல்லி, ஏப்.24

காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:

நேஷனல் ஹெரால்டு வழக்கில், ரூ.2 ஆயிரம் கோடி மதிப்புள்ள சொத்துகளை சோனியாகாந்தி, ராகுல்காந்தி ஆகியோர் அபகரிக்க முயன்றதாக பா.ஜனதா சொல்கிறது. அந்த சொத்துகளை யாரும் விற்க முடியாது, வாரிசுகளுக்கும் மாற்ற முடியாது. அவை அவர்களின் பெயரிலேயே இல்லை. பிறகு எப்படி அபகரிப்பு என்று சொல்ல முடியும்? எல்லாம் கட்டுக்கதை.

பிரதமர் மோடிக்கு அவருடைய ஆலோசகர்கள் தவறான யோசனைகளை சொல்லி வருகிறார்கள். அவரது வியூகம் எடுபடாது. விசாரணை அமைப்புகள்தவறாக பயன்படுத்தப்படுவதை மக்கள்நன்றாக உணர்ந்துள்ளனர். நானும் அமலாக்கத்துறை சம்மனுக்காக காத்திருக்கிறேன். ஏன் இன்னும் அழைக்கவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. பணம் பறிக்கவும், அரசியல் காரணங்களுக்காகவும்தான் அமலாக்கத்துறை விசாரணைக்கு அழைப்பதை என் கணவரிடம் விசாரணை நடந்தபோது கண்டறிந்தேன். என் கணவருக்கு மீண்டும் மீண்டும் சம்மன் அனுப்புகிறார்கள். 'உங்கள் தாய்க்கு 17 ஆண்டுகளுக்கு முன்பு ஏன் ரூ.4 லட்சம் கொடுத்தீர்கள்?'' என்று சம்பந்தம் இல்லாத கேள்விகளை கேட்கிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## ஸ்ரீநகர் சென்றடைந்தார் அமித்ஷா



ஜம்மு, ஏப்.24

காஷ்மீரில் பஹல்காம் பகுதியில் சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் கண்மூடித்தனமான தாக்குதல் நடத்திவிட்டு தப்பியோடினர். பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில்27அப்பாவிகள் பலியாகினர். தமிழ்நாடு, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த 12 சுற்றுலா பயணிகள் படுகாயமடைந்தனர். இவர்கள் அனைவரும் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஜம்மு காஷ்மீர் முழுவதும் பயங்கரவாதிகளை தேடி அழிக்கும் நடவடிக்கைகளில் பாதுகாப்பு படையினர் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர். இந்தநிலையில், ஜம்மு காஷ்மீரில் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து உயர்மட்டக் கூட்டத்தை நடத்துவதற்காக ஸ்ரீநகர் சென்றடைந்தார் உள்துறை மந்திரி அமித் ஷா. அவரை அம்மாநில முதல்மந்திரி உமர் அப்துல்லா மற்றும் முக்கிய அதிகாரிகள் வரவேற்றனர். தாக்குதல் சம்பவம் பற்றி சவுதி அரேபியாவிலிருந்து தொலைபேசியில் அமித்ஷாவிடம் கேட்டறிந்தார் பிரதமர் நரேந்திர மோடி. இந்த நிலையில், ஜம்மு காஷ்மீரில் சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள், நடத்திய தாக்குதலுக்கு உள்துறை மந்திரி அமித்ஷா கடும் கண்டனம் தெரிவித்து இருந்தார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், ஜம்மு காஷ்மீரில் சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலால் நான் மிகவும் வேதனையடைந்தேன். இறந்தவரின் குடும்பத்தினருடன் எனது எண்ணங்கள் உள்ளன. இந்த கொடூரமான பயங்கரவாதச் செயலில் ஈடுபட்டவர்கள் தப்பிக்க முடியாது, குற்றவாளிகளுக்கு பின்விளைவுகள் மோசமாக இருக்கும். சம்பவம் குறித்து பிரதமர் நரேந்திர மோடியிடம் விளக்கமளித்தேன், மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் காணொளி மூலம் ஆலோசனை நடத்தினேன். அவசர பாதுகாப்பு மறுஆய்வுக் கூட்டத்தை நடத்துவதற்காக விரைவில் ஸ்ரீநகருக்குச்செல்வேன்" என்று அதில் கூறி இருந்தார்.

# வாரிசு என்ற சொல்லை கேட்டாலே சிலருக்கு பத்திகிட்டு எரியுது: மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஏப்.24

சென்னை நடைபெற்ற விழாவில் 'திராவிட அறநெறியாளர் தமிழ் வேள் பி.டி.ராஜன் வாழ்வே வரலாறு' என்ற நூலை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டார். அதனை முன்னாள் நீதியரசர் சி.டி.செல்வம் பெற்றுக்கொண்டார்.

அதன்பின்னர் விழாவில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

திராவிட இயக்கத் தலைவராக இருந்தவர் தான் பி.டி.ராஜன். எந்தளவுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், பி.டி.ராஜன் அவர்களைப் போற்றினார்கள் என்றால், 1967ல் திமுக ஆட்சி அமைந்தபோது, அமைச்சர்களுக்கு எல்லாம் நீதிக்கட்சியின்சார்பில் பி.டி.ராஜன்அவர்கள் ஒரு விருந்து வைத்தார். அப்போது உரையாற்றிய பேரறிஞர் அண்ணா சொன்னார், "தந்தை பெரியாரின் சமூக சீர்திருத்தக் கருத்துகளை நிறைவேற்றுவேன்" என்று குறிப்பிட்டுவிட்டு, ''தமிழவேள் பி.டி.ராஜன் போன்ற பெருந்தலைவர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில், எனது ஆட்சி நடைபெறும்' என்று உறுதியளித்தார்.

பி.டி.ராஜன் அரிய ஆலோசனைகளை நிறைவேற்றி வைக்கும் செயல் வடிவமாகத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி திகழ்கிறது" என்று தலைவர் கலைஞர் சொன்னார். அந்த வழித்தடத்தில் தான் நாமும் இன்றைக்கு பயணித்துக் கொண்டு இருக்கிறோம். 1973ம் ஆண்டு மதுரையில் நடந்த பி.டி. ராஜன் அவர்களுடைய 82வது பிறந்தநாள் விழாவில், அன்றைக்கு முதல் அமைச்சராக இருந்த தலைவர் கலைஞர், அமைச்சர் பெருமக்களாக இருந்த நாவலர், பேராசிரியர் என். வி.நடராசன் என்று பலரும் கலந்து கொண்டார்கள். அந்த உணர்வு சிறிதும் குறையாமல், இன்றைக்கு 133 வது ஆண்டு விழாவில், நம்முடைய திராவிட மாடல் அமைச்சரவை கலந்து கொண்டு இருக்கிறது.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில், விழாஏற்பாட்டாளர்களுக்குஒன்றை நான்சுட்டிக்காட்டவிரும்புகிறேன்... விழாவின் அழைப்பிதழில், "நீதிக் கட்சியின் இறுதித் தலைவராகவும் இருந்த" என்று போட்டிருக்கிறீர்கள்... நன்றாக ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்... "நீதிக்கட்சிக்கு இறுதி என்பதே கிடையாது!" இன்னும் சொல்கிறேன்... "நீதிக்கட்சியின் நீட்சிதான் இந்த ஆட்சி" என்று தமிழ்நாடு சட்டமன்றத்திலேயே நான் சொல்லியிருக்கிறேன்.

இதையெல்லாம் கடந்து, 1966ம் ஆண்டு நீதிக்கட்சியின் பவளவிழா பொதுக்கூட்டத்தில், ''இன்றைய தி.மு.க.வினர் நம்முடைய வாரிசுகள்தான்' என்று பி.டி.ராஜன் அவர்களே குறிப்பிட்டார். எனவே, நான் அழுத்தந்திருத்தமாக சொல்கிறேன்.



திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி என்பது நீதிக்கட்சியின் தொடர்ச்சியான ஆட்சிதான். பி.டி. ராஜன் அவர்களுக்கு நம்முடைய அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் மட்டும் வாரிசு அல்ல, நானும் வாரிசுதான்; திராவிட வாரிசுகள். இங்கே இருப்பவர்கள் எல்லோரும் திராவிட வாரிசுகள். வாரிசு என்ற சொல்லைக் கேட்டாலே சிலருக்கு எரிகிறது. பற்றிக்கொண்டு எரிகிறது. அப்படி எரியட்டும் என்று தான் நாம் திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு எப்படி திராவிடத்தை ஒழிப்போம் என்று சில கைக்கூலிகள் பேசிக்கொண்டு இருக்கிறார்களோ, அதே மாதிரி, பி.டி.ராஜன் அவர்கள் காலத்திலும், "நீதிக்கட்சியை குழி தோண்டி பாதாளத்தில் புதைத்துவிடுவேன்" என்று ஒரு தலைவர் சொன்னார். ஆனால், பி.டி.ராஜனோடு தொடர்ச்சியாக, பண்பாளர் பழனிவேல் ராஜன் வந்தார்; இப்போது, பழனிவேல் தியாகராஜனும் நம்முடன் இருக்கிறார்.

அமைச்சர் பழனிவேல் தியாகராஜனை பொறுத்தவரைக்கும், அறிவார்ந்த வலிமையான வாதங்களை வைக்க கூடியவர். நான் அவருக்கு கூற விரும்புவது, இந்தச் சொல்லாற்றல் அவருக்குப் பலமாகதான் இருக்கவேண்டுமே தவிர, அவரின் பலவீனமாக ஆகிவிடக்கூடாது. இதை ஏன் அதை சொல்கிறேன் என்றால், அது அவருக்கே தெரியும். நம்முடைய எதிரிகள், வெறும் வாயையே மெல்லக் கூடிய விநோத ஆற்றல் பெற்றவர்கள், அவர்களின் அவதூறுகளுக்கு உங்களின் சொல் அவலாக ஆகிவிடக் கூடாது என்பதை கழகத் தலைவராக மட்டுமல்ல, உங்கள் மீது இருக்கின்ற அக்கறை கொண்டவனாகவும், அறிவுரை வழங்க கடமைப்பட்டிருக்கிறேன். என் சொல்லை தட்டாத பி.டி.ஆர் என்னுடைய அறிவுரையின் அர்த்தத்தையும், ஆழத்தையும் நிச்சயம் புரிந்துகொள்வார் என நம்புகிறேன்.

நாம் இந்தியின் எதிர்ப்பாளர்கள் அல்ல. இந்தியை திணிப்பவர்களின் எதிர்ப்பாளர்கள் என்று அன்றே விளக்கமாக தெரிவித்தவர் பி.டி. ராஜன் அவர்கள். அந்த கொள்கையை நாம் இன்றும் தொடர்ந்து வருகிறோம். டெல்லியின் ஆதிக்க மனப்பான்மையும் மாறவில்லை. நம் போராட்ட குணமும் ஓயவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# பெருத்த ஏமாற்றம் அளிக்கிறது அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் ஏஐடியூசி

பெருத்த ஏமாற்றம் அளிக்கிறது அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் தமிழ்நாடு டாஸ்மாக் பணியாளர்கள் சங்கம் ஏஐடியூசி இன்று (22.04.2025) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு மதுவிலக்கு, மின்சாரம் மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர், அவரது துறைக்கான மானியக் கோரிக்கையை முன்வைத்து ஒப்புதல் பெற்றுள்ளார். 2023 ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்து 21 ஆண்டுகள் பணித் தொடர்ச்சியும், திறன் தேர்ச்சியும் பெற்றுள்ள பணியாளர்களை பணி நிரந்தரம் செய்து, கால முறை ஊதியம் வழங்குவதற்கான கருத்துரு கொள்கை அறிக்கையில் முன் வைக்கப்படவில்லை. இருபது ஆண்டுகளில் பணி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு எந்தவித உதவியும் வழங்குவதில்லை.

ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை பரிசீலிக்கப்பட்ட அறிகுறியே கொள்கைக் குறிப்பில் காணப்படவில்லை. கடை நிர்வாகச் செலவினங்களை பணியாளர்கள் தலையில் சுமத்திவிட்டு, அவர்கள் எம் ஆர் பி எக்சஸ் விலையில் விற்று கொள்ளை அடிப்பது போல், சொந்தப் பணியாளர்களை அடையாளப்படுத்துவதும், ஒரு ரூபாய் கூடுதல் விலைக்கு தலா ரூ 1000 வீதம் அபதாரம் விதிப்பதும், அபதாரத் தொகைக்கு சரக்கு மற்றும் சேவை வரி வசூலிப்பது போன்ற செயல்களால் பணியாளர்களை கசக்கி பிழிந்து வரும் துயரத்துக்கும் தீர்வு காணவில்லை.

கடந்த ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நேரடி போராட்டத்தில் ஈடுபட்டனர். அதில் வெளிப்படுத்திய ஜனநாயக உணர்வும் மதிக்கப்படவில்லை என்பது வருத்தம் அளிக்கிறது.

கடந்த சட்டமன்றத் தேர்தலின் போது, தொகுப்பூதியத்தில் பத்தாண்டுகள் பணியாற்றியுள்ள அனைவரும் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்ற வாக்குறுதி எப்போது நிறைவேற்றப்படும் என்பது தெரியவில்லை. முந்தைய ஆட்சியில் 2019 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ரூ 2000 /= தொகுப்பூதிய உயர்வை இந்த அரசு மூன்றாண்டுகள் எதுவும் செய்யாமல் நகலெடுத்து செயல்படுத்தியிருப்பது பணியாளர்களுக்கு பெருத்த ஏமாற்றம் அளிக்கிறது. மதுவிலக்கு துறை அமைச்சரின் அறிவிப்பு கடுமையான எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அரசின் கவனத்துக்கு சுட்டிக்காட்டி, பணி நிரந்தரம், கால முறை ஊதியம், ஓய்வூதியம் என்ற கோரிக்கைகளை நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக தலையிட்டு தீர்வு காண வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

# பத்து அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

ராணிப்பேட்டை மாவட்டம் முத்துக்கடை பேருந்து நிலையம் அருகே பத்து அம்ச கோரிக்கைகளைவலியுறுத்திஜாக்டோஜியோ சார்பில் 60 க்கும் மேற்பட்டோர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பாலமுருகன்

ஸ்ரீதர், ஆகியோர் தலைமையில் இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் 2003 க்கு பிறகு அரசு பணியில் சேர்ந்துருக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டத்தினை கைவிட்டு பழையஓய்வுதிட்டத்தினை அமல்படுத்திட கோரியும், 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் பணியாளர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது உடனடியாக வழங்கிட கோரியும், சாலை பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை முறைப்படுத்த கோரியும் இதுபோன்று பத்துஅம்சகோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



# தூய யோவான் கல்லூரி பாளையங்கோட்டை நாட்டு நல பணித்திட்ட அணி எண் 29 சார்பாக நடைபெற்ற சிறப்பு முகாம்

தூய யோவான் கல்லூரி பாளையங்கோட்டை நாட்டு நல பணித்திட்ட அணி எண் 29 சார்பாக நடைபெற்ற சிறப்பு முகாம் ஆரைகுளம் முன்னீர் பள்ளம் பஞ்சாயத்து 7 நாட்கள் வெகு சிறப்பாக நடைபெற்றது இதில் கிராம மக்களுக்கு தேவையான அனைத்து மருத்துவ முகாம்கள் இலவசமாக செய்து கொடுத்தனர். மேலும் இங்கு இலவச கண் சிகிச்சை முகாம், பல் சிகிச்சை முகாம், இருதய நோய் மருத்துவ முகாம், ஹோமியோபதி, அக்குபஞ்சர், வர்மம்போன்ற மருத்துவ முகாம்கள் மக்கள் உடல் நலம் கருதி ஏற்பாடு செய்யப்பட்டது இதில் 200க்கும் மேற்பட்டோர்பயனடைந்தார்கள் ஒவ்வொரு நாளும் விழிப்புணர்வு பேரணி உறுதிமொழி, கருத்தரங்கங்கள் நடைபெற்றன மீண்டும் மஞ்சப்பை, நீர் மேலாண்மை, சுற்றுப்புறத் தூய்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மண்வள மேலாண்மை, போதை ஒழிப்பு ,நெகிழி ஒழிப்பு, விதைப்பந்துகள் வீசுதல் இன்னும் பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன மரம் நடுவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது இரண்டு ஆலயங்கள் தூய்மை செய்யப்பட்டது பொதுநல குழந்தைகள் விளையாட்டு மைதானம் ஆரை குளம் பொதுநல சேவா சங்கம் முன்பு உள்ள மேடை அதை சுற்றி உள்ள பகுதிகள் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சுத்தம் செய்யப்பட்டது இதனை ஒருங்கிணைத்து நடத்தியவர் முனைவர் பெலிக்ஸ் பிரான்சி நாட்டு நலத் திட்ட அலுவலர் தூய யோவான் கல்லூரி







உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள் தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

# கள்ளக்குறிச்சி விஷ சாராய வழக்கின் முக்கிய குற்றவாளிகளுக்கு ஜாமீன் ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, ஏப்.24

கள்ளக்குறிச்சி விஷ சாராய வழக்கில் முக்கிய குற்றவாளிகளான தாமோதரன், கன்னுக்குட்டி ஆகியோருக்கு சென்னை ஐகோர்ட்டு ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கருணாபுரத்தில் கடந்த ஆண்டு ஜுன் 19ம் தேதி விஷ சாராயம் குடித்த 67 பேர் மரணம் அடைந்தனர். இந்த வழக்கில் விஷ சாராயம் விற்பனை செய்வது, கடத்தியது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் 21 பேர் கைது செய்யபட்ட வழக்கைசிபிஜவிசாரித்து வருகிறது.

இந்த நிலையில் இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாக கைது செய்யப்பட்ட சாராய வியாபாரிகள் கன்னுக்குட்டி என்ற கோவிந்தராஜ் மற்றும் தாமோதரன் ஜாமீன் கோரி சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனு நீதிபதி சுந்தர் மோகன் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது சிபிஜ தரப்பில், இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியான தாமோதரன் மற்றும் கன்னுக்குட்டி என்ற கோவிந்தராஜுக்கு ஜாமீன் வழங்கக்கூடாது என தெரிவிக்கபட்டது.

மனுதாரர்கள் தரப்பில், 10மாதங்களுக்குமேலாக சிறையில் உள்ளதால், ஜாமீன் வழங்க வேண்டும் என தெரிவிக்கபட்டது. இதையடுத்து தாமோதரன் மற்றும் கன்னுக்குட்டி என்ற கோவிந்தராஜுக்கு நிபந்தனை ஜாமீன் வழங்கிய நீதிபதி உத்தரவிட்டார். மறு உத்தரவு வரும் வரை விசாரணை அதிகாரி முன்பு தினசரி ஆஜராக வேண்டும் என்று அவர்களுக்கு நிபந்தனை விதித்தார்.

# மதுரை வக்பு வாரிய கல்லூரியில், மூட்டாகிளை சார்பாக பேராசிரியருக்கான பணி நிறைவு பாராட்டு விழா



மதுரை வக்பு வாரியக் கல்லூரியில் மூட்டாக்கிளை சார்பாக பேராசிரியருக்கான பணி நிறைவு பாராட்டு விழா சர்குரோ அரங்கில் (ஏப்.22) நடைபெற்றது. இதில் முனைவர் வேலுச்சாமி, இணை பேராசிரியரும் பொருளாதாரத்துறை தலைவருமான தலைமையுரை ஆற்றினார். கல்லூரியின் மூட்டா கிளை தலைவர் முகம்மது நசுருதீன் வரவேற்றார். பணி நிறைவு விழாவிற்கான ஏற்புரையை முனைவர் மும்தாஜ், இணை பேராசிரியர் விலங்கியல் துறை தலைவர் ஆகியோர் ஏற்றுக் கொண்டனர். இவ்விழாவில்பணிநிறைவு பேராசிரியர் கல்லூரிக்காகவும் தங்களது துறைக்காகவும் செய்த சேவைகளை வாழ்த்தி மதுரை மாவட்ட ஆட்சியர் சங்கீதா, செயலர் மற்றும் தாளாளர் வக்பு வாரியக் கல்லூரி, வக்பு வாரிய கல்லூரியின் நிறுவனத் தலைவர் ஜனாப்.எதிகாசா சர்குரோ என்ற இம்தியாஸ் கல்லூரியின் முதல்வர் (பொறுப்பு) முனைவர் ஷாசுலி இப்ராஹிம், இயற்பியல் துறை இணை பேராசிரியர் முனைவர் ஆத்தியப்ப ராஜன், மூட்டா அமைப்பின் பொதுச்செயலாளர் முனைவர் செந்தாமரை கண்ணன், மூட்டாவின் முதல் மண்டலத்தின்தலைவர்முனைவர் ரமேஷ் ராஜ், மூட்டா முதல் மண்டலத்தின் செயலாளர் முனைவர் ராபர்ட் திலீபன் தமிழ் துறைத் தலைவர், உதவி பேராசிரியர் முனைவர் தௌலத் பேகம், பொருளாதாரத் துறை உதவி பேராசிரியர் முனைவர் ஆமினா பீவி மற்றும் கல்லூரியின் மூட்டா கிளைச் செயலாளர் முனைவர் மீர் இஸ்மாயில் அலி ஆகியோர்கள் பணி நிறைவு பேராசிரியருக்கு வாழ்த்தி சிறப்பு உரையாற்றினர். இந்நிகழ்ச்சியினை தமிழ் துறை உதவி பேராசிரியர் முனைவர் செல்வி கதீஜா பேகம் சிறப்பாக தொகுத்து வழங்கினார். இவ்விழாவினை கல்லூரியின் மூட்டா கிளை உறுப்பினர்களான முனைவர் மைதீன், முனைவர் அப்துல் காதர் முகைதீன் ஆகியோர் சிறப்பாக ஒருங்கிணைத்தனர்.

# நிரந்தர ஊழியர்களுக்கு இணையாக சம்பளம்.. தமிழக அரசுக்கு ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, ஏப்.24

தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் கடந்த 2015ம் ஆண்டு தொகுப்பூதிய அடிப்படையில் 7,243 செவிலியர்கள் பணியமர்த்தப் பட்டனர். 2 ஆண்டுகளுக்குப் பின் பணி நிரந்தரம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டும், 4 ஆயிரம் செவிலியர்கள் மட்டுமே பணி நிரந்தரம் செய்யப் பட்டனர்.

இதை எதிர்த்த வழக்கில், தொகுப்பூதிய செவிலியர்கள் நிரந்தர செவிலியர்களுக்கு இணையாக பணி செய்வதால் அவர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும். மக்கள் நல்வாழ்வு துறை செயலாளர் தலைமையில் குழு அமைத்து நிரந்தர செவிலியர்களின் பணியுடன், தொகுப்பூதிய செவிலியர்கள் செய்யும் பணியை ஒப்பீடு செய்து 6 மாதத்தில் சம வேலைக்கு சம ஊதியம் வழங்குவது தொடர்பாக முடிவெடுக்க வேண்டுமென கடந்த 2018ம் ஆண்டு சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை அரசு நிறைவேற்றாததால், கோர்ட்டு அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு தொகுப்பூதிய செவிலியர்கள், நிரந்தர செவிலியர்களின் பணி குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க ஒய்வு பெற்ற நீதிபதிகள் பார்த்திபன் மற்றும் பாரதிதாசன் அடங்கிய குழுவை அமைத்து உத்தரவிட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன் மற்றும் பி.டி.ஆஷா ஆகியோர் இன்று பிறப்பித்த உத்தரவில் , நீதிபதிகள் பார்த்திபன் மற்றும் பாரதிதாசன் அடங்கிய குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில், தொகுப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட்ட செவிலியர்களுக்கு, நிரந்தர செவிலியர்களுக்கு இணையாக ஊதியம் வழங்குவது தொடர்பாக கடந்த 2018ம் ஆண்டு ஐகோர்ட்டு பிறப்பித்த உத்தரவை 3 மாதங்களில் அமல்படுத்த வேண்டும் என அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

தற்போதைக்கு இந்த கோர்ட்டு அவமதிப்பு வழக்கை முடித்து வைப்பதாகக் குறிப்பிட்ட நீதிபதிகள், இந்த உத்தரவை அமல்படுத்தாவிட்டால், இந்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுக்கலாம் என்றும் நீதிபதிகள் தங்கள் உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# சின்னாளபட்டியில் போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்ட வாலிபருக்கு 20 ஆண்டுகள் சிறை, ரூ.1 லட்சம் அபராதம்



திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியை சேர்ந்த சிறுமியை கடந்த 2023 ஆம் ஆண்டு காதலிப்பதாக ஆசி வார்த்தை கூறி பாலியல் வன்கொடுமை செய்த பஞ்சம்பட்டியை சேர்ந்த கேத்தேஸ்ராஜா(19) என்பவரை சின்னாளப்பட்டி போலீசார் போக்சோவில் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்நிலையில் இவ்வழக்கு திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்த நிலையில் சின்னாளப்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் வசந்தகுமார் தலைமையிலான போலீசார் மற்றும் அரசு வழக்கறிஞர் ஆகியோரின் சீரிய முயற்சியால் சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் கேத்தேஸ்ராஜாவுக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ.1 லட்சம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்

# ஆரணி சைதாப்பேட்டை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் 501 பால்குட ஊர்வலம்



ஆரணி சைதாப்பேட்டை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் கூழ்வார்க்கும் திருவிழா முன்னிட்டு வியாழக்கிழமை 501 பால் குட ஊர்வலம் நடைபெற்றது.

ஆரணி சைதாப்பேட்டை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் ஏப்ரல் 25 அன்று கூழ்வார்க்கும் திருவிழா முன்னிட்டு வியாழக்கிழமை 501 பால் குட ஊர்வலம் கோயில் வளாகத்தில் இருந்து புறப்பட்டு மேட்டு தெரு உள்ளிட்ட மாட வீதிகள் வழியாக ஆரணி காளியம்மன் கோவில் வரை சென்று காளி அம்மனுக்கு பாலபிஷேகம் நடைபெற்றது. பால்குட ஊர்வலத்தில் நையாண்டி மேளம், பேண்டு வாத்தியம் முழங்க சென்றது. ஏற்பாடுகளை ஆரணி சைதாப் பேட்டை பகுதி மக்கள் மற்றும் கோயில் விழா குழுவினர் செய்திருந்தனர்.

# செங்கோட்டை நகர பேருந்து நிலையத்தில் தமிழக அரசின் புகைப்பட கண்காட்சி



தென்காசி மாவட்டம் செங்கோட்டை நகர பேருந்து நிலையத்தில் தென்காசி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப் படும் திட்டங்களை பொதுமக்கள் அறிந்திடும் வகையில் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி வைக்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப் பட்டுள்ள தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்படக்கண்காட்சியினை ஏராளமான பொது மக்கள் பார்வையிட்டார்கள். இதன் மூலம் இப்பகுதியில் உள்ள பொது மக்கள் புகைப்படக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ள நலத் திட்ட உதவிகள், ஆய்வுப்பணிகள் உள்ளிட்ட பல்வேறு புகைப்படத்தினை பார்வையிட்டுஅரசின்திட்டங்களை பற்றி அறிந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் திருராராமசுப்பிரமணியன் (செய்தி) மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வாகன சோதனையில் சிக்கிய ஒரு டன் குட்கா பறிமுதல் செய்த போலீசார்



ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை சென்ன சமுத்திரம் சுங்கச்சாவடி அருகே வாலாஜா நகர போலீசார் வாகனத்தணிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் அப்போது வாலாஜா பேட்டை சுங்கச்சாவடியை நோக்கி வேகமாக வந்த காரை சோதனை இட்டபோது கார் முழுவதும் கருப்பு துணியால் அடைக்கப்பட்டு இருந்ததை சந்தேகத்தின் பெயரில் பரிசோதனை செய்ததில் ஒரு டன் குட்கா பொருட்கள் கடத்தி வந்திருப்பது தெரிய வந்தது.

மேலும் இதில் பெங்களூர் சேர்ந்த கல்யாணராம் வயது 26 ராஜஸ்தானி சேர்ந்த கனாராம் வயது 29 ஆகிய இரு வாலிபர்கள் பெங்களூருவில் தங்கி குட்காவை சென்னைக்கு கடத்திச் சென்றது தெரியவந்தது மேலும் அவர்களிடமிருந்து ஒரு டன் குட்கா மற்றும் பான் மசாலா பொருட்களை பறிமுதல் செய்த போலீசார் இருவரையும் கைது செய்து வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து சிறையில் அடைத்தனர்.

# நிலத்தரகர்கள் சங்கத்தின் திருவண்ணாமலை மத்திய மாவட்ட புதிய நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா



நிலத்தரகர்கள் சங்கத்தின் திருவண்ணாமலை மத்திய மாவட்ட புதிய நிர்வாகிகளுக்கு களம்பூரில் பாராட்டு விழா நடைபெற்றது.

இந்திய தேசிய ரியல் எஸ்டேட் பில்டர்ஸ் லேண்ட் டெவலப்பர்ஸ் நிலத்தரகர்கள் சங்கத்தின் மத்திய மாவட்ட புதிய நிர்வாகிகளாக மாவட்ட தலைவர் டி.அகத்தியன், பொதுச் செயலாளர் ஜி.சுப்பிரமணி, மாவட்ட செயலாளர் ஏ.சம்பத் ஆகியோர நியமனம் செய்யப்பட்டனர். மேலும் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு ஆரணி அடுத்த களம்பூர் ரியல் எஸ்டேட் சங்க அலுவலகத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. இதில் களம்பூர் பேரூராட்சி தலைவர் கே.டி.ஆர்.பழனி மாவட்ட தலைவராக தேர்வு செய்யப்பட்ட டி.அகத்தியனுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். மேலும் பேரூராட்சிக்கு உட்பட்ட சங்க கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக உறுதி அளித்தார். மேலும் இதில் ரியல் எஸ்டேட் சங்கத்தின் மாவட்ட, நகர, ஒன்றிய கிளை நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# நெட்டூர் ஸ்ரீ பூவரசு முத்து மாரியம்மன் கோயில் சித்திரை திருவிழா: ஏராளமான பக்தர்கள் பூக்குழி இறங்கினர்



தென்காசி,ஏப்.24

ஆலங்குளம் அருகே நெட்டூர் ஸ்ரீ பூவரசு முத்து மாரியம்மன் கோயில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு ஏராளமான பக்தர்கள் பூக்குழி இறங்கினர்.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே நெட்டூரில் பிரசித்தி பெற்றது ஸ்ரீபூவரசு முத்துமாரியம்மன் கோயில் ஆகும். இங்கு சித்திரை திருவிழா கடந்த திங்கள் கிழமை தொடங்கியது. விழாவின் முதல் நாள் பக்தர்கள் தீர்த்தம் எடுத்து ஊர்வலமாக வந்து சுவாமிக்கு சிறப்பு அபிஷேகமும் நடந்தது. செவ்வாய்கிழமை மாலை நெட்டூர் ஸ்ரீ அப்ரான ந்தர் சுவாமி கோயிலில் நடந்த சிறப்பு பூஜைக்கு பின் பூக்குழி இறங்கும் சுவாமிகள் புறப்பாடு நடைபெற்றது. இதில் காப்பு கட்டி விரதமிருந்த பக்தர்கள் பூப்பெட்டி, தீச்சட்டி, ஆயிரம் கண் பானை தேமிதம் எடுத்து ஊர்வலம் வந்தனர்.

இதை தொடர்ந்து காப்பு கட்டிய பக்தர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு பூக்குழி இறங்கி தங்களது விளைநிலங்களில் பயிர்கள் நன்றாக மகசூல் தர வேண்டும், பிள்ளைகள் நன்றாக படிக்க வேண்டும், பிள்ளைகளுக்கு திருமண நேரம் கைகூட வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை வைத்து நேர்த்தி கடனை செலுத்தினர்.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை ஸ்ரீ பூவரசு முத்துமாரியம்மன் கோயில் நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

# தமிழ்நாடு கைப்பந்து அணியில் ஆரணி ஆரஞ்சு பள்ளி மாணவர்கள் தேர்வு



தமிழ்நாடு கைப்பந்து அணியில் ஆரணி ஆரஞ்ச் பள்ளி மாணவர்கள் 2 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய கைப்பந்து சம்மேளனத்தின் 40 வது தென் மண்டல கைப்பந்து சாம்பியன்ஷிப் 2025 போட்டியில் விளையாட தமிழ்நாடு அணிக்காக ஆண்கள் பிரிவில் ஆரணி ஆரஞ்ச் பள்ளி மாணவர் பி.நிஷால் மற்றும் பெண்கள் பிரிவில் ஆரணி ஆரஞ்ச் பள்ளி மாணவி எம்.பூஜா ஆகிய இரு மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

தேர்வு செய்யப்பட்ட மாணவர்களை ஆரணி ஆரஞ்ச் பள்ளியின் தலைவர் கே.சிவக்குமார், தாளாளர் அபிநயாவருண்முத்துலிங்கம் ஆகியோர் பாராட்டினர்.

மேலும் இந்திய கைப்பந்து சம்மேளனத்தால் அங்கீகரிக்கப்பட்ட தென் மண்டல கைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டிகள் தமிழ்நாடு கைப்பந்து சங்கம் சார்பாக திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் அமைந்துள்ள ஆரஞ்சு பிரிட்டிஷ் அகாடமி சீனியர் செகன்டரி பள்ளி வளாகத்தில் வரும் மே மாதம் 9 ஆம் தேதி முதல் 11 ஆம் தேதி வரை போட்டிகள் நடைபெற உள்ளது. இப்போட்டியில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, கோவா, கர்நாடகா, அந்தமான் நிக்கோபார் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநில அணிகள் போட்டிகளில் பங்கேற்கின்றன.

# பட்டிவீரன்பட்டி காமராஜர் நகரில் அடிப்படை வசதிகள் கேட்டு கோரிக்கை மனு

வத்தலகுண்டு,ஏப்.24

வத்தலகுண்டு அருகே உள்ள பட்டிவீரன்பட்டி பேரூராட்சி காமராஜர் நகரில் அடிப்படை வசதிகள்கேட்டு பேரூராட்சி அலுவலகத்தில் மனு அளித்தனர். பட்டிவீரன் பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட ஏழாவது வார்டில் உள்ள காமராஜர் புறத்தில் சுமார் 400 பேர் வசித்து வருகின்றனர் 100 வீடுகளுக்கு மேல் உள்ளது. இந்த நகரில் உள்ள பொது மக்கள் அடிப்படை வசதிகள் இல்லாமல் அவதிப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்று இப்பகுதி மக்கள் பேரூராட்சி மன்ற அலுவலகத்திற்கு வந்து உடனடியாக கழிவுநீர் கால்வாய் சாலை வசதி செய்து தரக் கோரி மனுவினை செயல அலுவலர் கோபிநாத்யிடம் வழங்கினர். மனுவை பெற்ற செயல் அலுவலர் இது சம்பந்தமாக உயர் அதிகாரிகளிடம் பேசி கழிவுநீர் வாய்க்கால் சாலை வசதி ஏற்படுத்தி தர நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். அப்போது திமுக நகர செயலாளர் அருண்குமார் மற்றும் கவுன்சிலர்கள் உடன் இருந்தனர்.

# ஜம்மு காஷ்மீர் பயங்கரவாத தாக்குதல்: உதவி எண்களை அறிவித்தது தமிழக அரசு

சென்னை, ஏப்.24

காஷ்மீர் பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து பாதிக்கப்பட்டோருக்கு உதவ அவசர எண்களை தமிழக அரசு அறிவித்துள்ளது. டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் 24 மணி நேரமும் இயங்கும் சிறப்பு உதவி மையம் தொடங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஜம்முகாஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பைசரான் பள்ளத்தாக்குப் பகுதியில் சுற்றுலாவிற்கு சென்றிருந்த பொது மக்கள் மீது தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிலர் படுகாயம் அடைந்துள்ளதாக தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இத்தகவலை கேள்விப்பட்டவுடன், தீவிரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளான தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களை பாதுகாக்கும் முகமாக முதற்கட்டமாக அவர்களுக்கு தொடர்பு கொள்ள ஏதுவாக புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் சிறப்பு உதவி மையம் தொடங்க உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் உதவி மையம் தொடங்கப்பட்டு, 01124193300 (தொலைபேசி), 9289516712 (மொபைல் மற்றும் வாட்ஸ்அப்) என்ற எண்ணில் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

24 மணி நேரமும் செயல்படும் உதவி மையம் அப்பகுதி மக்களின் தேவைகளை அறிந்து உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளும். இதற்காக புதுடில்லியில் உள்ள தமிழ்நாடு இல்ல ஆணையாளர் (Resident Commissioner) அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் புதுக்கோட்டைமாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப்ரசூலை நேரடியாக ஜம்முகாஷ்மீர் அனந்த்நாக் மாவட்டம் பஹல்காம் பகுதிக்குச் சென்று ஒருங்கிணைப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளவும் தேவையான மருத்துவ வசதிகளை வழங்கவும் முதல்அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்" இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நில அபகரிப்பு வழக்கு: ஜெயக்குமாருக்கு எதிரான தமிழக அரசின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி



சென்னை, ஏப்.24

கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் அமைச்சராகப் பதவி வகித்த ஜெயக்குமார், தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தியும், அடியாட்களை வைத்து மிரட்டியும் தனது நிலத்தை அபகரித்துக் கொண்டதாக, அவரது மருமகனான மகேஷ் காவல் துறையில் மகேஷ் புகார் அளித்திருந்தார்.

இந்தப் புகாரின் அடிப்படையில், சென்னை மத்தியக் குற்றப் பிரிவு போலீசார்,

ஜெயக்குமார், அவரது மகள் ஜெயப்பிரியா, மருமகன் நவீன்குமார் ஆகியோர் மீது, கொலை மிரட்டல் உள்ளிட்ட 6 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.

இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி ஜெயக்குமார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் வழக்கை ரத்து செய்து கடந்த ஆண்டு செப்டம்பர் 30ம் தேதி உத்தரவிட்டது. சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு தரப்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மேல்முறையீடு மனு இன்று சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் மனோஜ் மிஸ்ரா, விஸ்வநாதன் கொண்ட அமர்வு மனுவை விசாரித்தது. அப்போது ஜெயக்குமாருக்கு எதிரான வழக்கில் ஐகோர்ட்டு பிறப்பித்த உத்தரவில் தலையிட விரும்பவில்லை என தெரிவித்த நீதிபதிகள் தமிழக அரசின் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்தது.

# பாஜக அலுவலகத்தை முற்றுகையிட முயற்சி: நயினார் நாகேந்திரன் கண்டனம்



சென்னை, ஏப்.24

வக்பு திருத்தச் சட்டத்தை எதிர்ப்பதாகக் கூறி திமுகவின் ஆதரவு அமைப்பான ஆதித்தமிழர் கட்சியினர் நமது மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் உருவப்படத்தை எரித்து வன்முறைப் போராட்டத்தில் ஈடுபட்டு, தமிழக பாஜக அலுவலகத்தை முற்றுகையிட முயற்சித்தது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இஸ்லாமிய சகோதரிகளின் உரிமைகளையும் இஸ்லாமிய மக்களின் நலனையும் ஒருசேரப் பாதுகாக்கும் இச்சட்டத்தை முழு மனதோடு ஆதரிப்பதாக நாட்டின் பல்வேறு இஸ்லாமிய அமைப்புகளும், இஸ்லாமிய சமூகங்களைச் சார்ந்த மக்களும், இச்சட்டத்தின் திருத்தங்களைப் படித்து தெளிவுபெற்ற அறிஞர்களும் தங்கள் ஆதரவைத் தெரிவித்து வருகிறார்கள். இவ்வேளையில், திமுக அரசின் நிழலில் இருக்கும் ஒரு சில அமைப்புகளுக்கு இதுபோன்ற வன்முறை சம்பவங்களில் ஈடுபடும் தைரியம் எங்கிருந்து வந்தது?

ஒருவேளை ஆட்சி அதிகாரம்தங்கள்கையில் இருப்பதால், திமுக அரசே ஆதித்தமிழர் கட்சியினரைத் தூண்டிவிட்டு, இன்று இந்த போராட்டம் அரங்கேற்றப்பட்டதோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுகிறது.

காரணம், நாடாளுமன்ற கூட்டுக் குழுவிலும், பாராளுமன்றத்திலும் பல மணி நேரம் விவாதம் நடைபெற்ற பிறகே வக்பு திருத்த மசோதாவானது சட்டமாக அமல்படுத்தப்பட்டது. இந்த திருத்தச் சட்டம் தொடர்பான வழக்கும் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் இது போன்ற திடீர் போராட்டங்களும் அதில் நமது பிரதமரின் உருவப்படங்கள் எரிக்கும் வன்முறைகளும் எதற்கு? இது போன்ற செயல்பாடுகள் மக்கள் மத்தியில் ஒரு பதற்ற சூழலை உண்டாக்குவதோடு சட்டம் ஒழுங்கினை சீர்குலைக்கும் என்பது ஆட்சியாளர்களுக்குத் தெரியாதா?

எனவே, தமிழக மக்களிடையே வெறுப்புணர்வைத் தூண்டும் இது போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் இனியும் நடக்காமல் தடுத்து, தமிழகத்தில் உள்ள அனைத்து பாஜக அலுவலகங்களுக்கும் உரிய பாதுகாப்பு அளிப்பதோடு பாஜக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்ய வேண்டுமென தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை வலியுறுத்துகிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிவன் கோவில்களில் சித்திரை மாத திருவோண சிறப்பு வழிபாடு



திருவோண சிறப்பு வழிபாட்டின் ஒரு பகுதியாக, சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது.

சித்திரை மாத திருவோணத்தை முன்னிட்டு சிவன் கோவில்களில் சிறப்பு அபிஷேக ஆராதனை மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன. இதில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

தர்மபுரி குமாரசாமிப்பேட்டை சிவசுப்பிரமணியசாமி கோவில் வளாகத்தில் உள்ள ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ மத் ஆனந்த நடராஜர் சபையில் சித்திரை மாதத்தில் வரும் திருவோண நட்சத்திரத்தில் மங்கள இசையுடன் கலச ஸ்தாபனம், விக்னேஸ்வர பூஜை, சங்கல்பம், மூலவர் திருமஞ்சனம் உள்ளிட்ட சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது. பின்னர் சபையின் முகப்பு மண்டபத்தில் ஆனந்த நடராஜ பெருமானுக்கு 16 வகை சுகந்த பரிமள திரவியங்களை கொண்டு மஹா அபிஷேகம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து புஷ்பாஞ்சலியுடன் உச்சி காலத்தில் சோடச உபசாரம், வேத பாராயணம், பஞ்ச புராண பாராயணம் நடைபெற்றது. பின்னர் சாமிக்கு சிறப்பு அலங்கார சேவையும் மஹா தீபாராதனையும் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இந்த சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு சிறப்பு பிரசாதம் வழங்கப்பட்டது.

தர்மபுரி ஆத்துமேடு ஸ்ரீ நஞ்சுண்டேஸ்வரர் கோவிலில் சுவாமிக்கு பால், பன்னீர், சந்தனம், மஞ்சள், விபூதி உள்ளிட்ட நறுமணப்பொருட்கள் மற்றும் பல்வேறு வகையான பழங்களை கொண்டு சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆராதனை நடைபெற்றது. பின்னர் சாமிக்கு சிறப்பு அலங்கார சேவையும், மகா தீபாராதனையும் நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.


இதேபோல் தர்மபுரி நெசவாளர் நகர் மங்களாம்பிகை உடனாகிய ஸ்ரீ மகாலிங்கேஸ்வரர் கோவிலிலும் சித்திரை மாத திருவோணத்தை முன்னிட்டு சிறப்பு அபிஷேக ஆராதனை மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன. தர்மபுரி கடைவீதி ஸ்ரீ அம்பிகா பரமேஸ்வரி அம்மன் உடனாகிய ஸ்ரீ மருதவாணேஸ்வரர் கோவில், அன்னசாகரம் சாலையில் உள்ள ஸ்ரீ சித்திலிங்கேஸ்வரர் கோவில், செவல்பட்டி ஸ்ரீ ஆதி லிங்கேஸ்வரர் கோவில், மதிகோன்பாளையம் சிவன் கோவில், தீர்த்தமலை தீர்த்தகிரீஸ்வரர் கோவில் உள்ளிட்ட தர்மபுரி பகுதியை சுற்றியுள்ள அனைத்து சிவன் கோவில்களிலும் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

கீழ்பென்னாத்தூர்

கீழ்பென்னாத்தூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் ஸ்ரீசிவகாமி சமேத நடராஜர் மற்றும் மாணிக்கவாசகருக்கு சிறப்பு பூஜை நடந்தது. மஞ்சள், குங்குமம், பால், தயிர், விபூதி, பன்னீர், தேன், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட18 வகையான பொருட்களால் அபிஷேகம் செய்தனர். சிறப்பு ராஜ அலங்காரம் செய்தும், ஆராதனை செய்தும், மலர்களால் அர்ச்சனை செய்தும் பக்தர்கள் நடராஜ பெருமானை வழிபட்டனர்.

# கீழப்பெரும்பள்ளம் நாகநாத சுவாமி கோவிலில் 26ம் தேதி கேது பெயர்ச்சி விழா



மயிலாடுதுறை, ஏப்.24

பூம்புகார் அருகே கீழப்பெரும்பள்ளம் நாகநாத சுவாமி கோவிலில் நவகிரகங்களில் ஒன்றான கேது பகவானுக்கு தனி சன்னதி உள்ளது. இது கேது பரிகார ஸ்தலமாக விளங்குகிறது. இவரை வழிபட்டால் நீதிமன்ற வழக்குகளில் சாதகம், திருமணத்தடைகள் விலகுவது உள்ளிட்ட பல்வேறு நன்மைகள் பெறலாம் என்பது ஐதீகம்.

கேது பகவான் ஒன்றரை ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்கு பின்னோக்கி பெயர்ச்சி ஆகிறார். அவ்வகையில் கேது பகவான் வருகிற 26 ஆம் தேதி (சனிக்கிழமை) மாலை 4:20 மணிக்கு கன்னி ராசியிலிருந்து சிம்ம ராசிக்கு இடம் பெயர்கிறார். கேது பெயர்ச்சியை முன்னிட்டு, நாகநாத சுவாமி கோவிலில் காலையிலிருந்து கேது பரிகார மகா யாகம் நடக்கிறது. இதனைத் தொடர்ந்து மகா பூர்ணாஹுதி செய்யப்பட்டு தீபாராதனை காண்பிக்கப்படுகிறது. பின்னர் பல்வேறு பொருட்களால் அபிஷேகம் செய்யப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து சரியாக மாலை 4.20 மணிக்கு தீபாராதனை காண்பிக்கப்பட்டு பிரசாதங்கள் வழங்கப்படுகின்றன. கேது பெயர்ச்சி விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகம் மற்றும் கிராமவாசிகள் செய்து வருகின்றனர். பல்வேறு மாநிலங்களில் இருந்து வரும் பக்தர்கள் எளிதாக தரிசனம் செய்யும் வகையில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வருட கேது பெயர்ச்சி காரணமாக மேஷம், ரிஷபம், கடகம், சிம்மம், கன்னி, மகரம், கும்பம், தனுசு மற்றும் விருச்சிக ராசிக்காரர்கள் உரிய பரிகாரங்களை மேற்கொள்ள வேண்டும் என ஜோதிட வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

# அதிக லாபம் தரும் கவர்ச்சிகரமான முதலீட்டு தகவல்களை நம்ப வேண்டாம்: டிஜிபி சங்கர் ஜிவால் எச்சரிக்கை



சென்னை, ஏப்.24

மாநில இணையவழி குற்றப்பிரிவு போலீசார், இணையவழிக் குற்றங்களைத் தடுப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சியில் ஆன்லைன் முதலீட்டு மோசடி, உதவித்தொகை மோசடி மற்றும் டிஜிட்டல் கைது மோசடி போன்ற பரந்த அளவிலான சைபர் குற்றங்களில் ஈடுபட்ட 12 சைபர் குற்றவாளிகளை கைது செய்துள்ளனர்.

இதனை குறிப்பிட்டு டிஜிபி சங்கர் ஜிவால் போலீசாரை வெகுவாக பாராட்டியுள்ளார். மேலும், சைபர் குற்றங்களிலிருந்து பாதுகாப்பாக இருக்க பின்வரும் ஆலோசனைகளை வழங்கி பொதுமக்களை எச்சரித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது;

1 எந்தவொரு ஆன்லைன் வேலை வாய்ப்பும் அளவுக்கு அதிகமாக மெருகூட்டப்பட்டதாகத் தோன்றினால், உண்மையான தனிப்பட்ட விவரங்கள் இல்லை என்றால் எச்சரிக்கையாக இருங்கள்.

2. அதிக லாபத்தை வழங்கும் கவர்ச்சிகரமான முதலீட்டு தகவல்களை நம்ப வேண்டாம்.

3. அவர்கள் அதிகப்படியான இலாபங்களுக்கு உத்தரவாதம் அளித்தால், மோசடிக்கான வாய்ப்புகள் அதிகம். மக்கள் விழிப்புடன் இருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. தனிப்பட்ட அல்லது நிதி தகவல்களை அறியப்படாத நபர்களுடன் தொலைபேசியில் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

5. வங்கிக் கணக்குகளுக்கு இரண்டு காரணி அங்கீகாரத்தைப் பயன்படுத்தவும். மேலும், சைபர் மோசடியாளர்களால் நிதி மோசடிகளுக்கு இதுபோன்ற கணக்குகள் தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்பதால், தங்கள் வங்கிக் கணக்குகள் அல்லதுகிரிப்டோகரன்சி பணப்பையை கடன் வழங்குவதற்கு எதிராக பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். இது போன்ற செயல்களில் யாராவது ஈடுபட்டிருப்பது கண்டறியப்பட்டால், அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

7. அரசு முகமைகள் அல்லது கல்வி நிறுவனங்களின் அதிகாரப்பூர்வ வலைத்தளங்களில் கிடைக்கும் தகவல்களை மட்டுமே நம்புங்கள். கல்வி உதவித்தொகை வழங்கும் கோரப்படாத அழைப்புகள் அல்லது செய்திகளுக்கு பதிலளிப்பதைத் தவிர்க்கவும்.

8. https://ssp.tn.gov.in, https://scholarshipgov.in/AllScholarship போன்ற இணையதளங்களில் மத்திய மற்றும் மாநில அரசு உதவித்தொகைக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். ஒரு வலைத்தளம் அரசாங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை சரி பார்க்க,அதன்டொமைன் gov.in உடன் முடிவடைகிறதா என்று சரிபார்க்கவும்.

9. ஆதார் எண்கள், வங்கிக்கணக்குத்தகவல் அல்லது ஓடிபி போன்ற முக்கியமான விவரங்களை ஒருபோதும் தொலைபேசி அழைப்புகள் அல்லது வீடியோ அழைப்புகளில் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

10. அரசு உதவித்தொகைக்கு கியூஆர் குறியீடுகளை ஸ்கேன் செய்யவோ அல்லது நிதி வழங்குவதற்கு பணம் செலுத்தவோ தேவையில்லை.

11. நீங்கள் உங்கள் பள்ளி மூலம் உதவித்தொகைக்கு விண்ணப்பித்திருந்தால், பள்ளி அதிகாரிகளுடன் மேலும் ஏதேனும் தொடர்பு இருந்தால் சரி பார்க்கவும். "

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# நெல்லையில் கஞ்சா வைத்திருந்த 2 பேர் கைது

திருநெல்வேலி ஏப்.24

நெல்லை மாவட்டம், பத்தமடை பகுதியில் சப் இன்ஸ்பெக்டர் கண்ணன் தலைமையிலான காவல் துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பத்தமடை சிவானந்தா காலணி, வெள்ளநீர் கால்வாய் பாலம் அருகே சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த வடக்கு அரியநாயகிபுரம், பள்ளிவாசல் தெருவைச்சேர்ந்த செல்வரமேஷ் (வயது 26) என்ற நபரை சோதனை செய்தபோது, அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்ககூடிய 60 கிராம் கஞ்சாவை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக அவர் வைத்திருந்தது தெரிய வந்தது.

இதனையடுத்து சப் இன்ஸ்பெக்டர் கண்ணன் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு செல்வரமேஷை நேற்று கைது செய்ததோடு, அவரிடமிருந்து 60 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்தார்.

இதேபோல் திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை, சாந்திநகர் மணிக்கூண்டு அருகில் நேற்று மதுவிலக்கு பிரிவு சப்இன்ஸ்பெக்டர் சந்திரா மற்றும் போலீசார் ரோந்து சென்றனர். அப்போது அப்பகுதியில் சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த பாளையங்கோட்டை, சமாதானபுரத்தைச் சேர்ந்த முத்தையா மகன் செல்வம் (வயது 40) என்பவரை சோதனை செய்தனர். அப்போது அவர் 10 கிராம் கஞ்சா மறைத்து வைத்திருந்தது தெரிய வந்தது.

இதனையடுத்து செல்வத்தை கைது செய்ததோடு, அவரிடமிருந்து 10 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்து, வழக்கு பதிவுசெய்து, விசாரணை நடத்தினர்.

# யுபிஎஸ்சி தேர்வு முடிவுகள் வெளியீடு: தமிழகத்தில் நான் முதல்வன் திட்ட மாணவன் முதலிடம்

சென்னை, ஏப்.24

2024ம் ஆண்டுக்கான யு.பி.எஸ்.சி. சிவில் சர்வீஸ் தேர்வின் இறுதி முடிவுகள் இன்று வெளியிடப்பட்டுள்ளன. https://upsc.gov.in/ என்ற இணையதளத்தில் தேர்வர்கள் முடிவுகளை தேர்வர்கள் அறிந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று வெளியான இறுதி தரவரிசைப் பட்டியலில் மொத்தமாக 1,009 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த சக்தி துபே என்ற மாணவி முதலிடம் பெற்றுள்ளார். ஹர்ஷிதா கோயல் என்பவர் 2ம் இடமும், டோங்க்ரே அர்ஷித் பராக் என்பவர் 3ம் இடமும் பெற்றுள்ளனர். தேர்ச்சி பெற்றவர்களில் 335 பேர் பொதுப்பிரிவினர், 109 பேர் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர், 318 பேர் ஓபிசி, 160 பேர் எஸ்சி, 87 பேர் எஸ்டி, 45 பேர் மாற்றுத்திறனாளிகள்.

தமிழகத்தில் சிவச்சந்திரன் என்ற மாணவர் முதலிடமும், அகில இந்திய அளவில் 23ம் இடமும் பெற்றுள்ளார். இவர் தமிழக அரசின் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர். மேலும் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் படித்த 50 பேர் இந்த தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. நான்முதல்வன்' திட்டத்தில் பயிற்சி பெற்ற மோனிகா, தேசிய அளவில் 39வது இடம் பிடித்துள்ளார்.

# தூத்துக்குடி: கொலை முயற்சி வழக்கில் 2 பேர் குண்டர் சடத்தில் கைது

தூத்துக்குடி, ஏப்.24

தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பரிந்துரையின்படி, மாவட்ட கலெக்டர் இளம்பகவத் உத்தரவின் பேரில், கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் தகராறு செய்து கொலை முயற்சியில் ஈடுபட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்களான கோவில்பட்டி, மூப்பன்பட்டி பகுதியைச் சேர்ந்த ஞானசேகர் மகன் முகில் ராஜ் (வயது 19) மற்றும் கோவில்பட்டி, இலுப்பையூரணி பகுதியைச் சேர்ந்த சுடலைமுத்து மகன் குமார் (23) ஆகிய இருவரையும் நேற்று முன்தினம் (20.04.2025) கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீசார் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
24.4.2025

# மின் கட்டணத்தை அதிகமாக உயர்த்தியது அ.தி.மு.க.தான்: செந்தில் பாலாஜி விளக்கம்



சென்னை, ஏப்.24

சட்டசபையில் மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை மீதான மானியக்கோரிக்கை விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர் நத்தம் விஸ்வநாதன் பேசினார். அப்போது அவர், தி.மு.க. ஆட்சியில் மின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டதால் மக்கள் அவதிக்கு உள்ளாகி இருப்பதாக குறிப்பிட்டார்.

இதற்கு அமைச்சர் செந்தில்பாலாஜிபதில்அளித்து கூறியதாவது:

அ.தி.மு.க. ஆட்சியில் தான் அதிகளவில் மின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டது. அதை மறைத்து விட்டு உறுப்பினர் பேசக்கூடாது.கடந்தஅ.தி.மு.க. ஆட்சியில் பல முறை மின் கட்டணம் உயர்த்தப்பட்டது, அதாவது 56.9 சதவீதம் அளவுக்கு உயர்த்தினார்கள். அதன் பிறகு பெயரளவுக்கு 4 சதவீதத்தை குறைத்தார்கள். ஆனால் நாங்கள், 30 சதவீதம்தான் உயர்த்தினோம். தமிழகம் முழுவதும் சீரான மின்சாரத்தை வழங்கி வருகிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# நான் முதல்வன் திட்டம்: மு.க.ஸ்டாலினுக்கு செல்வப்பெருந்தகை பாராட்டு



சென்னை, ஏப்.24

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

யுபிஎஸ்சி தேர்வு முடிவுகளை வெளியிட்டுள்ளது இந்திய குடிமைப் பணியாளர் தேர்வாணையம். அதில் உயர்கல்வியை நோக்கிய ஒரு பயணத்திட்டமான நான் முதல்வன் திட்ட போட்டி தேர்வுகள் பிரிவு மூலம் பயிற்சி பெற்ற சிவச்சந்திரன் அவர்கள் அகில இந்திய அளவில் தரவரிசையில் 23ம் இடமும், தமிழ்நாட்டில் முதலிடம் பெற்றுள்ள செய்தியறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். அவருக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தேர்ச்சி பெற்ற 50 பேரில் 18 நபர்களும் நான்முதல்வன்திட்டத்தில் முழுநேரமும் தங்கியிருந்து பயிற்சி பெற்றவர்கள் என்பதும், தமிழ்வழியில் தேர்வு எழுதிய காமராஜர், சங்கர் பாண்டியராஜ் ஆகியோர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது. தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைவருக்கும் வாழ்த்துகளும், பாராட்டுகளும்.

நான் முதல்வன் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எந்த நோக்கத்திற்காக கொண்டு வந்தார்களோ, அது முழுமையாக நிறைவேறியிருக்கிறது என்பதற்கு இதைவிடச் சான்று தேவையில்லை. இந்நேரத்தில் முதல்அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக நன்றியினையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.என தெரிவித்துள்ளார் .

# திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் கோவிலில் புதுச்சேரி முதல்அமைச்சர் ரங்கசாமி தரிசனம்

திருக்கடையூர், ஏப்.24

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் தருமபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான அமிர்தகடேஸ்வரர் கோவில் உள்ளது. இங்கு மூலவராக அமிர்தகடேஸ்வரும், உற்சவராக காலசம்ஹார மூர்த்தியும் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றனர். பல்வேறு சிறப்பு வாய்ந்த இந்த கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய புதுச்சேரி முதல்அமைச்சர் ரங்கசாமி வருகை தந்தார்.

முன்னதாக கோவில் நிர்வாகம் சார்பில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அவர் கோவிலில் விநாயகர், அமிர்தகடேஸ்வரர், கால சம்ஹார மூர்த்தி, அபிராமி அம்மன் உள்ளிட்ட சன்னதிகளுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார்.



# வெவ்வேறு மதத்தினர் கலப்பு திருமணம் செய்தால் பதிவு செய்ய முடியாதா? தமிழக அரசு விளக்கம்

சென்னை, ஏப்.24

நடிகர் அமீர், நடிகை பாவ்னி ஆகியோர் சமீபத்தில் திருமணம் செய்து கொண்டனர். இவர்களுடைய திருமணம் செல்லுப்படியாகாது என்றும், வேறு மதங்களை சேர்ந்தவர்கள் கலப்பு திருமணம் செய்தால் தமிழ்நாடு பதிவுத்துறை அலுவலகங்களில் பதிவு செய்ய முடியாது என்றும் நடிகர் பயில்வான் ரங்கநாதன் கூறியதாக ஒரு வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. இதனை பலரும் பகிர்ந்து வருகின்றனர்.

இதற்கு தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது. இதுதொடர்பாக தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூகஊடககணக்கிற்கான தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில், "இது முற்றிலும் பொய்யானதகவல். இருவேறு மதத்தினர் கலப்பு திருமணம் செய்து கொள்வதற்கு சிறப்பு திருமண சட்டத்தின் கீழ் அனுமதி உள்ளது. அதில் வகுக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில் வேறு வேறு மதங்களை சேர்ந்தவர்களாக இருந்தாலும் சட்டப்படி திருமணத்தை பதிவு செய்து கொள்ளலாம். இதுபோல நடைபெறும் திருமணங்கள் தமிழ்நாடு அரசின் பதிவுத் துறையால் பதிவு செய்யப்பட்டு வருகிறது" என்று கூறப்பட்டுள்ளது.

# ஜம்முகாஷ்மீருக்கு செல்லும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்: டிடிவி தினகரன்



சென்னை, ஏப்.24

ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகள், சுற்றுலாப்பயணிகள் மீது நடத்திய தாக்குதல் நாட்டையே உலுக்கியுள்ளது. பகல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் நடத்திய இந்த கொடூர தாக்குதலில் 26 பேர் பலியாகியுள்ளனர். இதில் வெளிநாட்டு பயணிகளும் அடங்குவர் என்று சொல்லப்படுகிறது. மேலும் பலர் காயம் அடைந்துள்ளனர். ஜம்மு காஷ்மீரில் நடைபெற்ற கொடூர தாக்குதலுக்கு தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இந்த சம்பவத்திற்கு அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

ஜம்மு காஷ்மீரின் பகல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் நிகழ்த்திய துப்பாக்கிச் சூட்டில் 20 க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்திருப்பதாகவும் பலர் காயமடைந்திருப்பதாகவும் வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கிறது.

பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த சுற்றுலா பயணிகளின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்ளும் இதே நேரத்தில், இந்த தாக்குதலை நடத்தியவர்கள் கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, ஜம்மு காஷ்மீருக்கு சுற்றுலா செல்லும் பயணிகளின்பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துகிறேன்.ன்.என தெரிவித்துள்ளார் .

# சிவில் சர்வீசஸ் தேர்வு முடிவு: டாக்டர் ராதாகிருஷ்ணன் மகன் அரவிந்த் வெற்றி

சென்னை, ஏப்.24

சிவில் சர்வீசஸ் பதவிக்கான நேர்முகத் தேர்வு முடிவு நேற்று வெளியானது. இதில் 1,009 பேர் வெற்றி பெற்று இருப்பதாக தேர்வை நடத்திய யு.பி.எஸ்.சி. அதற்கான பட்டியலுடன்வெளியிட்டு இருந்தது. அந்த பட்டியலில் மின்சார வாரியத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணனின் மகன் டாக்டர் அரவிந்த் ராதாகிருஷ்ணன் 80வது இடத்தில் இருக்கிறார். இதற்கு முன்பு அரவிந்த் ராதாகிருஷ்ணன் கடந்த 2022ம் ஆண்டு சிவில் சர்வீசஸ் தேர்வில் பங்கேற்று தேர்ச்சி பெற்றோருக்கான பட்டியலில் 361வது இடத்தை பெற்றாலும், பணியில் சேரவில்லை.இதனைத்தொடர்ந்து2024ம்ஆண்டுக்கான இந்த தேர்வில் பங்கேற்று 1,009 பேர் பட்டியலில் 80வது இடத்துக்கு வந்துள்ளார். தற்போது அரவிந்த், மருத்துவ பட்ட மேற்படிப்பில் (எம்.டி. ) இறுதியாண்டு தேர்வை எழுதி முடிக்க உள்ளார்.

# காஷ்மீர் பயங்கரவாத தாக்குதல்: விஜய் கண்டனம்



சென்னை, ஏப்.24ற்

ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகள், சுற்றுலாப்பயணிகள் மீது நடத்திய தாக்குதல் நாட்டையே உலுக்கியுள்ளது. பகல்காம் பகுதியில் பயங்கரவாதிகள் நடத்திய இந்த கொடூர தாக்குதலில் 26 பேர் பலியாகியுள்ளனர். இதில் வெளிநாட்டு பயணிகளும் அடங்குவர் என்று சொல்லப்படுகிறது. மேலும் பலர் காயம் அடைந்துள்ளனர். ஜம்மு காஷ்மீரில் நடைபெற்ற கொடூர தாக்குதலுக்கு தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இந்த சம்பவத்திற்கு தவெக தலைவர் விஜய் கண்டனம் தெரிவித்துள்ளார் இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், ஜம்முகாஷ்மீரின்பகல்காம் பகுதியில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல், நமது தமிழ்நாட்டு சகோதரர்கள் உட்பட அப்பாவி உயிர்களைப் பலிகொண்டது குறித்து ஆழ்ந்த வேதனை அடைகிறேன். இந்த கோழைத்தனமான மற்றும் இழிவானவன்முறைச் செயலை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது மனமார்ந்த இரங்கலையும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்தனைகளையும் செய்கிறேன்.என தெரிவித்துள்ளார் .

# விருதுகளை விட ரசிகர்களின் அன்புதான் முக்கியம் சாய் பல்லவி



'பிரேமம்' படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர்சாய்பல்லவி.தனதுமுதல்படத்திலேயே சாய்பல்லவிக்குசிறந்தநடிகைஎன்றுபெயர்கிடைத்ததை தொடர்ந்துதமிழ்படத்தில்நடிக்கவாய்ப்புகள்கிடைத்தன. நடிகை சாய் பல்லவி நடிப்பில் இறுதியாக வெளியான 'அமரன், தண்டேல்' ஆகிய இரு படங்களும் வெற்றி பெற்றதால் தென்னிந்திய சினிமாவின் உச்ச நட்சத்திர நடிகையாக சாய் பல்லவி மாறியுள்ளார். தற்போது, இந்தியில் பிரம்மாண்டமாக உருவாகும் ராமாயணம் படத்தில் சீதா கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார்.

இந்தநிலையில் சாய்பல்லவி சமீபத்தில் நடந்த நேர்காணலில் எனக்கு விருதுகளை விட ரசிகர்களின் அன்பு தான் முக்கியம் என்று கூறியுள்ளார். அதாவது, "தியேட்டரில்ரசிகர்கள்என்கதாபாத்திரங்களைபார்த்துஅந்தஎமோஷன்உணர்வுகளுடன்தங்களைஇணைத்து கொள்வதை உண்மையான வெற்றியாக பார்க்கிறேன். கதாபாத்திரத்தின் மூலம் ரசிகர்களுக்கு நேர்மையாக சொல்லக்கூடிய கதைகளை மட்டுமே சொல்ல வேண்டும் என்று எப்போதும் எதிர்பார்க்கிறேன்.

நான் நினைத்த மாதிரி அந்த கதாபாத்திரங்களில் எமோஷனுடன் ரசிகர்கள் கனெக்ட் ஆனார்கள் என்றால் அதுவே மிகப்பெரிய வெற்றியாக பாவிக்கிறேன். அதனால் தான் நான் எப்பொழுதும் விருதுகளை விட ரசிகர்களின் அன்பை பெற்றுக் கொள்வதற்கு முதல் முக்கியத்துவம் கொடுக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# உங்களை பற்றி நீங்கள் கேள்விப்பட்ட அபத்தமான வதந்தி என்ன..? தோனி பதில்



இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிகரமான கேப்டன்களில் ஒருவர் மகேந்திரசிங் தோனி. இந்தியாவுக்கு 3 ஐ.சி.சி. உலகக்கோப்பைகளை (டி20, ஒருநாள் மற்றும் சாம்பியன்ஸ் டிராபி) வென்று கொடுத்த பெருமைக்குரியவர். தற்போது ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டனாக செயல்பட்டு வருகிறார்.

இந்நிலையில் சமீபத்திய நிகழ்ச்சி ஒன்றில் மகேந்திரசிங் தோனியிடம் தொகுப்பாளர், "உங்களை பற்றி நீங்கள் கேள்விப்பட்ட அபத்தமான வதந்தி என்ன?" என்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த தோனி, "நான் ஒரு நாளைக்கு 5 லிட்டர் பால் குடிப்பேன்" என்று கூறி சிரித்தார்.

# பும்ரா, மந்தனாவுக்கு விஸ்டன் கவுரவம்



இங்கிலாந்து தலைநகர் லண்டனில் இருந்து வெளியாகும் 'கிரிக்கெட் உலகின் பைபிள்' என்று போற்றப்படும் 'விஸ்டன்' புத்தகம் ஆண்டுதோறும் சிறந்த 5 வீரர்களைதேர்வுசெய்துஅவர்களதுசாதனைவிவரங்களைவெளியிட்டுகவுரவிப்பது வழக்கமாகும். இதில் இங்கிலாந்து மண்ணில் நடைபெறும் போட்டிகளில் சிறப்பாக செயல்படும் வீரர், வீராங்கனைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இதன்படி 2025ம் ஆண்டு பதிப்பில் இடம் பெறும் சிறந்த 5 வீரர், வீராங்கனைகள் யார் என்பதை 'விஸ்டன்' வெளியிட்டுள்ளது. இதில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா, இந்திய பெண்கள் அணியின் துணை கேப்டன் ஸ்மிருதி மந்தனா ஆகியோரின் பெயர்களும் இடம் பெற்றுள்ளது. 31 வயதான பும்ரா கடந்த ஆண்டில் (2024) டெஸ்ட் கிரிக்கெட்டில் 71 விக்கெட்டுகளை வீழ்த்தினார் . 28 வயதான மந்தனா கடந்த ஆண்டில் மூன்று வடிவிலான போட்டியிலும் சேர்த்து 1,659 ரன்கள் சேர்த்தார். இது, சர்வதேச கிரிக்கெட்டில் ஒரு ஆண்டில் வீராங்கனை ஒருவர் எடுத்த அதிகபட்ச ரன்கள் ஆகும் . இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் அட்கின்சன், விக்கெட் கீப்பர் ஜாமி சுமித், இங்கிலாந்து வீராங்கனை சோபி எக்லெஸ்டோன் ஆகியோரின் பெயரும் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

# இயக்குனர் லோகேஷ் கனகராஜ் வெளியிட்ட அதிரடி அறிவிப்பு!



'மாநகரம்' படத்தை இயக்கி பிரபலமானவர் லோகேஷ் கனகராஜ். அதை தொடர்ந்து கார்த்தி நடித்த 'கைதி', விஜய்யின் 'மாஸ்டர்', கமல்ஹாசனின் 'விக்ரம்' படங்களை டைரக்டு செய்தார். லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்த 'லியோ' திரைப்படம் உலகம் முழுவதும் ரூ.600 கோடிக்கு மேல்வசூலானது.லோகேஷ்சினிமாட்டிக்யூனிவர்ஸ்என்றகான்செப்ட்டை தொடங்கி அதன் கீழ் தொடர்ந்து பல படங்களை இயக்கி வருகிறார். இதற்காகவே லோகேஷ் கனகராஜ் இயக்கும் படங்களின் மீதான எதிர்பார்ப்பு மிகப்பெரிய அளவில் இருந்து வருகிறது.

தற்போது லோகேஷ் கனகராஜ் ரஜினிகாந்த்தை வைத்து 'கூலி' படத்தினை இயக்கி வருகிறார். கூலி திரைப்படம் வருகிற ஆகஸ்ட் 14ந் தேதி திரைக்கு வர உள்ளது. சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்தின் பின்னணி வேலை விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், இயக்குனர் லோகேஷ் கனகராஜ் தனது எக்ஸ் தளத்தில் அதிரடி அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதாவது, 'கூலி' படத்தின் புரமோஷன் பணிகளில் கலந்து கொள்ள உள்ளதால், தற்காலிகமாக சமூக வலைதள பக்கத்தில் இருந்து விலகுவதாக கூறி லோகேஷ் கனகராஜ் அதிர்ச்சி கொடுத்துள்ளார்.

# உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை




உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி பெரு தலைநகர் லிமாவில் நடந்தது. கடைசி நாளான நேற்று முன்தினம் பெண்களுக்கான 25 மீட்டர் ரேபிட் பயர் பிஸ்டல் இறுதி ஆட்டத்தில் தங்கப்பதக்கத்துக்கு இந்தியாவின் சிம்ரன்பிரீத் கவுருக்கும், சீனாவின் யுஜ்லி சன்னுக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. 9வது சுற்று நிறைவில் யுஜ்லி சன் ஒரு புள்ளி வித்தியாசத்தில் முன்னிலையில் இருந்தார். இதனால் கடைசி ரவுண்ட் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. இந்த ரவுண்டில் இருவரும் தலா 3 புள்ளிகள் எடுத்தனர். முடிவில் யுஜ்லி சன் 34 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்து தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார்.

சிம்ரன்பிரீத் கவுர் 33 புள்ளிகளுடன் 2வது இடத்தை பெற்று வெள்ளிப்பதக்கத்தை சொந்தமாக்கினார். மற்றொரு சீன வீராங்கனை யாவ் கியான்ஸன் 29 புள்ளிகளுடன் வெண்கலப்பதக்கம் பெற்றார்.

இந்த போட்டியில் இந்தியா 2 தங்கம், 4 வெள்ளி, ஒரு வெண்கலம் என மொத்தம் 7 பதக்கத்துடன் 3வது இடத்தை பெற்றது. சீனா 13 பதக்கத்துடன் (4 தங்கம், 3 வெள்ளி, 6 வெண்கலம்) முதலிடத்தையும், அமெரிக்கா 7 பதக்கத்துடன் (4 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலம்) 2வது இடத்தையும் பிடித்தது.

# கையில் கற்பூரம் ஏந்தி ரஜினியை வரவேற்ற ரசிகர்



ரஜினிகாந்த் நடிப்பில் நெல்சன் இயக்கத்தில் 2023ம் ஆண்டு ஜெயிலர் திரைப்படம் வெளியானது. அனிருத் இசையமைத்த இத்திரைப்படம் ரூ. 600 கோடிக்கும் மேல் வசூல் செய்து சாதனை படைத்தது. இந்த படத்தின் வெற்றியை தொடர்ந்து இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது. 'ஜெயிலர் 2' என பெயரிடப்பட்டு உருவாகிவரும் இத்திரைப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. சன் பிக்சர்ஸ் தயாரித்து வரும் இப்படத்திற்கு அனிருத் இசையமைத்து வருகிறார்.

சமீபத்தில் இப்படத்தின் படப்பிடிப்பு கோவையில் நடைபெற்று நிறைவடைந்தது. அதனை தொடர்ந்து தற்போது கேரளாவில் உள்ள அட்டப்பாடி மலைத்தொடரில் கடந்த சில நாட்களாக படப்பிடிப்பு பணிகள் நடைப்பெற்று வருகிறது.

இதையடுத்து படப்பிடிப்பை முடித்து விட்டு ரஜினிகாந்த் காரில் நின்றபடி மெதுவாக சென்று கொண்டிருந்தார். ரஜினிகாந்தை பார்த்ததும் ரசிகர்கள் உற்சாகமாகினர். □□தலைவா.. தலைவா.. '' என்று கோஷமிட்டனர். ரசிகர்களை நோக்கி சிரித்தப்படி ரஜினிகாந்த் கைகளை அசைத்து மகிழ்ச்சியை தெரிவித்தார். இந்நிலையில் ரஜினியை பார்த்த ரசிகர் ஒருவர் வெறும் கையில் கற்பூரம் ஏந்தி ரஜினியை வரவேற்றார். அந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# தமிழக விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை: ஷிவம் துபே வழங்கினார்




தமிழக இளம் வீரர், வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகை வழங்கும் விழா சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் நேற்று நடந்தது.

இந்திய கிரிக்கெட் வீரரும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடும் அதிரடி பேட்ஸ்மேனுமானஷிவம்துபேசிறப்புவிருந்தினராககலந்துகொண்டுஊக்கத்தொகைக்கு தேர்வு செய்யப்பட்டு இருந்த அபிநந்த் (டேபிள் டென்னிஸ்), வெனிசா ஸ்ரீ (வில்வித்தை), முத்துமீனா வெல்லச்சாமி (பாரா தடகளம்), ஷமீனா ரியாஸ் (ஸ்குவாஷ்), ஜெயந்த், நந்தனா (இருவரும் கிரிக்கெட்), கமலி (அலைச்சறுக்கு), அபிநயா, ஜித்தின் அர்ஜூனன் (இருவரும் தடகளம்), தக்ஷந்த் (செஸ்) ஆகியோருக்கு தலா ரூ.70 ஆயிரம் விதம் மொத்தம் ரூ.7 லட்சமும் வழங்கினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.